பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 20 வியாழக்கிழமை (06.12.2007)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 10

## கெப்பிற்றிக்கொலாவையில் கிளைமோர்! அப்பாவிப் பயணிகள் 15 பேர் கோரப் பலி!!

கொழும்பு, டிசெம்பர்6

அநுராதபுரம் மாவட்டம் கெப்பிற்றிக்கொலாவை அருகில் நேற்று முன்னிரவு பயணிகள் பஸ் ஒன்று வீதியோரக் கிளைமோரில் சிக்கியதில் அப்பாவிப் பயணிகள் 15 பேர் கோரப்பலியாகினர். 25 பேர் வரை படுகாயமடைந்தனர்.

கெப்பிற்றிக்கொலாவை - பதவியா வீதியில் பதவிஸ்ரீபுரவுக்கு அருகில் அபிமான புர என்ற இடத்தில் நேற்றிரவு 8.20 மணியளவில் இந்தக்கொடூரம் இடம்பெற்றது.

அநுராதபுரத்தில் இருந்து ஜானகபுரவுக்குச் சென்று கொண்டிருந்த - இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச்சொந்தமான - பஸ் ஒன்றே இவ்வாறு கிளைமோரில் சிக்கியிருக்கின்றது.

கிளைமோருக்கு இலக்கான பஸ்ஸில் அச்சமயம் ஐம்பது பயணிகள் வரை முண்டியடித்து நிறைந்திருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் மூன்று பெண்கள் உட்பட 15 பேர் பலியானதாக முன்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. படுகாயமடைந்த 25 பேர் கெப்பிற்றிக் கொலாவை வைத்தியசாலைக்கு அவசர சிகிச்சைக்காக எடுத்துச்செல்லப்பட்டனர்.

இருவர் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச் (08ஆம் பக்கம் பார்க்க)

# அசாதாரண சூழ்நிலை வரும்போது அவசரகாலச் சட்டமே மேலோங்கும்!

## அரசமைப்பை அணைத்துக் கொண்டிருக்க முடியாது என்கிறார் பிரதமர் ரட்ணசிறி



கொழும்பு,டிசெம்பர்6

நாட்டில் அசாதாரண நிலை ஏற்படும்போது, சாதாரண சட்டங்களை இடைநிறுத்தியே பாதுகாப்பை பலப்படுத்தமுடியும். அப்போதெல்லாம் அவசரகாலச் சட்டமே மேலோங்கி நிற்கும். அரசமைப்பை நாம் அணைத்துப் பிடித்துக் கொண்டிருக்கமுடியாது.

இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தல் 'விளாசினார்' பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க.

சபை ஒத்திவைப்பு வேளையின்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தா பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்தார்.

அந்தப் பிரேரணைக்குப் பதில் அளித்துப் பேசுகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரேரணைக்குப் பதிலளித்துப் பேசிய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா கூறியவை வருமாறு:-

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்திலும் நுகேகொடையிலும் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்களைத் தொடர்ந்து பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

### 2554 பேர் கைது; 202 பேர்களே தடுத்துவைப்பு

பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளின்போது இரண்டாயிரத்து 554 பேர் கைதுசெய்யப்பட்டனர். விசாரணையின் பின் இரண்டாயிரத்து 352 பேர் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர். இன்னும் 202பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் (08ஆம் பக்கம் பார்க்க)

## தந்திரிமலையில் அமுக்கவெடி நான்கு படையினர் பலி!

கொழும்பு,டிசெ.6

அநுராதபுரம் மாவட்டம் தந்திரிமலைப் பகுதியிலுள்ள சின்ன சிப்பிக்குளம் என்ற இடத்தில் இராணுவத்தினரின் டிராக்டர் ஒன்று அமுக்க வெடியில் சிக்கியதில் நான்கு படையினர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் இரு படையினர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுப் பிற்பகல் 12.50 மணியளவில் அந்த இடத்தில் படையினர் டிராக்டர் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த வேளையிலேயே இந்த அமுக்கவெடி வெடித்தது எனவும், அது ஏற்கனவே திட்டமிட்டு அங்கு பொருத்தி வைக்கப்பட்டதாக இருக்கலாம் எனவும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் காயமடைந்த படையினர் அநுராதபுரம் பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். (சி)

## தமிழ் இளைஞர்களின் கைது சட்டவிரோதமானது; அனைவரையும் நிபந்தனையின்றி விடுதலை செய்க

### ஒத்திவைப்புப் பிரேரணையில் ஸ்ரீகாந்தா



கொழும்பு,டிசெ.6

கொழும்பில் கைதுசெய்யப்பட்ட தமிழர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன. அவர்கள் சட்டத்துக்கு விரோதமான முறையிலேயே கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரையும் நிபந்தனையின்றி அரசு விடுதலை செய்யவேண்டும்.

இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் தாம் சமர்ப்பித்த ஒத்திவைப்புப் பிரேரணையில் கோரினார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தா.

அவரது பிரேரணையை திருமலை (08ஆம் பக்கம் பார்க்க)

## கைத்தொலைபேசி மூலம் கப்பம் கோரப்படுகிறது; அதனால் அவற்றின் பாவனை நிறுத்தப்பட்டுள்ளது

### படைத்தளபதி ஜி.ஏ.சந்திரசிறி தகவல்

யாழ்ப்பாணம்,டிசெ.6

குடாநாட்டில் வர்த்தகர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோரிடம் கைத்தொலைபேசி மூலம் கப்பம் கோருவது தெரியவந்துள்ளது. அதனையடுத்து கைத்தொலைபேசிகளின் பாவனை கடந்த மூன்று தினங்களாக குடாநாட்டில் நிறுத்தப்பட்டுள்ளது.

யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி இத்தகவலைத் தெரிவித்தார்.

யாழ். நகர வர்த்தகர்களுடன் நேற்று மாலை இடம்பெற்ற ஒரு சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் படைத்தளபதி யாழ். நகர வர்த்தகர்களைச் சந்தித்தார். இருநூறுக்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பில் அவர் தெரிவித்தவை வருமாறு:- (08ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## G.T.Z அனுசரணையுடன் பெண்களுக்கான கடலக தொழில்நுட்பவியல் பயிற்சி

மேற்படி பயிற்சி நெறியைப் பயில விரும்புபவர்கள் பூர்த்தி செய்யப்பட்ட சுயவிவரங்களை 15.12.2007 இற்கு முன் கீழ்க் குறிப்பிட்ட விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்.

வயது எல்லை - 18 - 35

பயிற்சிக்காலம் - மூன்று மாதங்கள்

உதவிப் பணிப்பாளர்,
கடற்றொழில் மற்றும்
கடலோட்டு எந்திரவியல் கல்லூரி
இல. 372, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 2226251

(68675)


## தவறிவிட்டது

வீமன்காமம், தெல்லிப்பழையைச் சேர்ந்த ஜெகநாதன் தவமணிதேவியின் விசேட அ. அட்டை (இல.0907021279) 02.12.2007 அன்று சங்கானைக்கும் பண்டத்தரிப்பிற்கும் இடையில் தவறவிடப்பட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் M.A.இம்மனுவேல், யோசெப் வீதி, சில்லாலை, பண்டத்தரிப்பு என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். (68664)


துள்ளுவதோ இளமை...
காவேரியில் அள்ளுவதோ மலிவு!



இதுவரை நீங்கள் எங்குமே கண்டிராத
புடைவை வகைகளின்
மாபெரும் மலிவு விற்பனை
மக்கள் ஆதரவுடன்
தொடர்கிறது...

காவேரி சில்க்ஸ்
48, பெரியகடை, யாழ்ப்பாணம்.

(சி/54621)


## 31 ஆம் நாள் நினைவில்...

மண்ணில்: 11 ✦ 09 ✦ 1965



விண்ணில்: 05 ✦ 11 ✦ 2007

### அமரர் பூபாலன் கமலாகரன்

ஆலம் விழுதுகள் போல் உறவுகள்
ஆயிரம் இருந்துமென்ன
வேரென நீரிருந்தீர் அதில் நாம்
வீழ்ந்து விடாதிருந்தோம் - இன்று
ஆற்றுவார் தேற்றுவார் இன்றி
செய்வதறியாது நெஞ்சம் தடுமாறுதையா
நீர் ஓடோடி வரமாட்டீரோ ஐயா...

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (06.12.2007) வியாழக்கிழமை சுன்னாகம் கிழக்கு, விக்கினேஸ்வரன் இல்லத்தில் நடைபெறும். இதில் உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மாமா, மாமி,
மைத்துனர்கள், சகோதரர்,
உறவினர்கள்.
திரு.திருமதி விக்கினேஸ்வரன் குடும்பம்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.
0214591938

(68665)

## ஒத்துமாறல்

அம்பாறையில் உள்ள பாடசாலை ஒன் றில் விஞ்ஞானபாடத்தை கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் யாழ்ப்பாணத்துக்கு ஒத்துமாற விரும்புகின்றார். தொடர்பு கொள்ளவும்.

தொ.பே.இல:- 0776670137 (68671)
958/9, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

நீர்வேலி மேற்கு, 4ஆம் கட்டைக்கு அருகாமையில் தோட்ட நிலம் 10 பரப்பு விற்பனைக்கு உண்டு. தொடர்பு : 69/1, அம்மன் வீதி, கந்தர்மடம்.

ஞாயிற்றுக்கிழமைகளில் தொடர்பு கொள்ளவும்.

(68676)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் பழைய மாணவரும்
எமது முன்னாள் ஆசிரியை
**திருமதி சின்றல்லா யோகேஸ்வரன்**
அவர்களின் சகோதரருமாகிய
**தர்மலிங்கம் ஸ்ரீகாந்தன் (அதிபர்)**
அவர்களின் திடீர் மரணச் செய்தி கேட்டு மிகுந்த வருத்தமடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்,
யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்.

(68673)

## Invitation

**Uduvil Girls' College**
Presents
**a Christmas Cantata**
'A Timeless Story'
on Friday 7th December, 2007, 3.30p.m
at The College Hall

(C/54620)


**இதோ,**

இளமைத் துடிப்புமிக்க முழுமையான, திருப்திகரமான, பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியைப் பெருகச் செய்து, பூரிக்கச் செய்வதற்கும் விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும் நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீங்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

100% இளமையையும் வலிமையையும் தரும்

**சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:-
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:- 6382) AR/PR/No: 228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்)

(சி/54611)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி கலிஸ்ரா ஸ்ரீபாலன்



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட கலிஸ்ரா ஸ்ரீபாலன் 29.11.2007 பிரான்ஸில் காலமானார்.

அன்னார் ஸ்ரீபாலன் அவர்களின் அன்பு மனைவியும் ஜெனிஸ்ரலா, டானியேல், மேரி கிறிஸ்ரினா, ஸ்ரீ கிறிஸ்ரினா ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்றவர்களான சிங்கராசா - தெரேசம்மாள் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சபாபதி - அன்னம்மா தம்பதியரின் மருமகளும் லூர்த்தம்மா, இராசேஸ்வரி, செல்வராணி, கிறிஸ்ரி ஆகியோரின் சகோதரியும் பாக்கியநாதன் (பிரான்ஸ்), தேவராசா, லோரன்ஸ் (அமரர்), இருதயப்பிரகாசம், லூர்த்தம்மா, இராசராணி, டொமினிக்கா, ஞானராசா, றெஜினா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 10.12.2007 திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறும். அவ்வேளையில் உடுவில் தெற்கு, புதுமடத்திலுள்ள அன்னம்மா அவர்களின் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதுமடம்,
உடுவில் தெற்கு.
T.P.: 0033141502477 (பிரான்ஸ் - கணவர்).

தகவல்:
சி.டொமினிக்கா.

(68661)

### பாலசுப்பிரமணியம் தர்மரட்ணம்



(முன்னாள் சாரதி, C.T.B. வவுனியா)

பலகாடு, காரைநகரைப் பிறப்பிடமாகவும் 62/1 அம்மன் வீதி, பண்டாரிக்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் தர்மரட்ணம் 25.10.2007 அன்று சவூதியில் காலமானார்.

அன்னார் பாலசுப்பிரமணியம் - அம்பிகை தம்பதியரின் அன்பு மகனும் இரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2007) வியாழக்கிழமை பண்டாரிக்குளம், வவுனியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்போதைய முகவரி
7/2, தாழையடி ஒழுங்கை,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (68669)

தகவல்:
ச.பாலசுப்பிரமணியம்
(தந்தை)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகரட்ணம் புஸ்பகுணம்



சுழிபுரம் கிழக்கு, வீரபத்திரர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கனகரட்ணம் புஸ்பகுணம் நேற்று (05.12.2007) புதன்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - செல்லம்மா தம்பதியரின் ஏக புத்திரியும் காலஞ்சென்றவர்களான அராலி சின்னத்தம்பி(ஆசாரியார்) - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவரான சின்னத்தம்பி கனரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும் புஸ்பராணி (ஆசிரியை, சுழிபுரம் வடக்கு ஆறுமுகம் வித்தியாலயம்), கிருஸ்ணமூர்த்தி (மூர்த்தி மாஸ்ரர் - ஆசிரியர் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, வட்டு இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் லோகநாதன், தர்மலிங்கம், நாகேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுகுமார், ஜெயகௌரி ஆகியோரின் அன்பு மாமியாரும் தங்கமணி, தங்கரட்ணம், சிவபாக்கியம், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, அமரசிங்கம் (ஸ்பதபதி அராலி), கணேசலிங்கம், செல்வரட்ணம், தவமணி, பராசக்தி, வாகீஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுதர்சன், பிரியதர்சன், திருக்குமரன், அபர்னா, நிருத்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2007) வியாழக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.கிருஸ்ணமூர்த்தி (மகன்)
திசமழை, வீரபத்திரர் கோயிலடி,
சுழிபுரம் கிழக்கு.
தொ.பே. 06[illegible]4, 0214[illegible]74

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



மலர்வு 14✦01✦1931 உதிர்வு 06✦11✦2007

கடந்த 06.11.2007 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் சின்னத்தம்பு சேனாதிராஜா

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (06.12.2007) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


வல்லியானந்தம் வீதி,
துன்னாலை வடக்கு, கரவெட்டி.
தொ.பே.: 0602214093, 0773124603

மனைவி, பிள்ளைகள்,
மகன் சே.தவசிலன்.

(68660)

## ஓராண்டு நினைவலைகள்

தாயின் மடியில்: 11 ✦ 08 ✦ 1953



இறைவன் அடியில்: 18 ✦ 11 ✦ 2006

### அமரர் நடராசா சுதர்சன்

(களஞ்சியப் பொறுப்பாளர், லங்கா சிமெந்து லிமிட்டெட்)

திதி: ஏகாதசி

ஓராண்டு சென்றாலும்
பக்கத்தில் இருக்கின்றீர்கள்
அதிசயமாக வாழ்வை நீத்தே
ஆண்டவனிடம் சென்றீர்கள்
ஆண்டு பல சென்றாலும்
ஆறாது உங்கள் நினைவு.

வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு. (சி/54615)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் பணியாற்ற தெற்கிலிருந்து 10 வைத்தியர்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.6

தென்னிலங்கையைச் சேர்ந்த பத்து வைத்திய அதிகாரிகள் யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் கடந்த திங்கட்கிழமை தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

டாக்டர் இந்திக்கா வாஸ், டாக்டர் யு.எ.டி.பெர்னாண்டோ - தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலைக்கும், டாக்டர் செல்வி தி.பாலசிங்கம் - நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கும், டாக்டர் ஜே.எம்.சி.பி.ஜெயசேகரா, டாக்டர் யு.ஏ.ஜே.சானகா, டாக்டர் ஏ.புண்ணியமூர்த்தி- காரைநகர் சுற்றயல்கூறு வைத்தியசாலைக்கும், டாக்டர் டி.ஜெயக்குமாரன்- மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கும்-

டாக்டர் கே.ஜி.கே.கொடாகொட, டாக்டர் ஆர்.எஸ்.மகாகெதற, டாக்டர் டி.டி.சொயிஸா ஆகியோர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்குரிய நியமனக் கடிதங்களை யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் வழங்கியுள்ளார்.

இதேவேளை - மேலும் சில வைத்திய அதிகாரிகள் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்னர் தென்னிலங்கையில் இருந்து வருகை தந்து கடமை ஏற்கவுள்ளதாகவும் யாழ்.சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-51)

## மட்டுவில் தெற்கில் நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம்,டிசெ.6

வீட்டுக்காரர் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த வேளையில் வீட்டினுள் நுழைந்த திருடர்கள், அங்கிருந்து சுமார் ஒரு லட்சத்து 5ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் 15ஆயிரம் ரூபா பணத்தையும் சூறையாடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் மட்டுவில் தெற்கில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை நுணாவில் மேற்குப் பகுதியில் பூட்டப்பட்டிருந்த வீட்டின் அறையை உடைத்து அங்கிருந்த மோட்டார் சைக்கிள் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளதாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-207)

## தென்மராட்சி வலய பாடசாலைகளுக்கு...

யாழ்ப்பாணம்,டிசெ.6

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் தரம் 11 வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகளுக்கான பாடசாலை மட்ட கணிப்பீட்டுப் படிவங்கள், வலயக் கல்வி அலுவலகத்திற்கு வந்துள்ளன.

இப்பாடசாலைகளின் அதிபர்கள் படிவத்தினைப் பெற்று எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## ஹாட்லிக் கல்லூரி இதழ் வெளியீடு

வடமராட்சி,டிசெ.6

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் மன்றம் இவ்வாண்டு தொகுப்பு இதழ் ஒன்றை வெளியிடவுள்ளது.

இம்மன்றம் கடந்த பத்து ஆண்டு காலத்தில் செய்த சேவைகளை எடுத்துக் கூறும் விதத்தில் இத்தொகுப்பு நூல் வெளியிடப்படவுள்ளதாக மன்றத்தின் செயலாளர் வ.செல்வராசன் தெரிவித்தார். (202-160)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.6

சிறுதோழர் ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (202)

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.6

மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழாவும் ஒளிவிழாவும் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சூ.நோபேட் உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பண்டத்தரிப்பு பங்குத்தந்தை அருட்திரு எம்.ஜேசுரட்ணம் கலந்துகொள்வார். (202)

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.6

ஆ.ரவீந்திரன், செல்வி இந்திராதேவி செல்வநாயகம் ஆகியோர் இணைந்து எழுதிய 'சீரிய சிந்தனை விசேட கல்வி அடிப்படைகள்' என்னும் நூலின் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்வியியல் கல்லூரியில் அதன் பீடாதிபதி எஸ். கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடப் பீடாதிபதி கே.தேவராஜா கலந்துகொள்வார். (202)

# குடாநாட்டில் போதிய மழைவீழ்ச்சி இல்லை: காலபோக நெற்செய்கையில் பாதிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.6

இவ்வருடம் போதிய மழைவீழ்ச்சி இல்லாததால் காலபோக நெற்செய்கையில் எதிர்பார்த்த விளைச்சலைத் தராது என விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தற்பொழுது வயல்களில் நீர் வற்றியுள்ளது. இதனால் பயிர்களின் வளர்ச்சிக்குப் போதியளவு நீர் காணாமல் பயிர்கள் கருகி அழியும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வருடம் விவசாயிகளுக்கு விவசாயத் திணைக்களத்தால் போதியளவு உர வகைகள் மானிய அடிப்படையில் வழங்கப்பட்டன. எனவே இம்முறை விவசாயிகள் ஆர்வத்துடன் நெற்செய்கையில் ஈடுபட்டனர். எனினும் பல இடங்களிலும் வயல்களில் போதியளவு தண்ணீர் இல்லை. இதனால் சில விவசாயிகள் கிணறுகள், குளங்களில் இருந்து நீர் இறைப்பதற்குத் தொடங்கியுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் தற்பொழுது நெல்லின் விலை அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்நிலையில் - அடுத்து வருடம் நெல்லின் விளைச்சல் குறைவடைந்தால் அதன் விலை மேலும் அதிகரிக்கும் நிலை ஏற்பட வாய்ப்பு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (202-131)

# கொழும்பில் கைதானோரின் நிலைமைகள் குறித்து அமைச்சர் டக்ளஸ் ஜனாதிபதியுடன் பேச்சு

யாழ்ப்பாணம்,டிசெ.6

கொழும்பில் கைதுசெய்யப்பட்டிருப்போர் தொடர்பான நிலைமைகள் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அமைச்சர் கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோருடன் பேச்சுகளை நடத்தினார் என்று ஈ.பி.டி.பி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பல்வேறு தேவைகளுக்காகவும் கொழும்பு வந்துள்ள தமிழ்மக்கள் புலித் தலைமையின் யுத்த வன்முறையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆயிரக்கணக்கான தமிழ் பேசும் மக்கள் கொழும்பில் வாழ்ந்து வருகின்றார்கள். இந்நிலையில் அரசின் பாதுகாப்பு நடவடிக்கைகள் அப்பாவி மக்கள்மீது அவலங்களைச் சுமத்துவதாக அமைந்துவிடக் கூடாது.

புலிகளின் வன்முறை நடவடிக்கைகளால் அப்பாவி மக்களே பெரிதும் பாதிக்கப்படுவதாக இச்சந்திப்பின்போது அமைச்சர் எடுத்து விளக்கியிருந்தார்.

இச்சந்திப்பின்போது கைதுசெய்யப்பட்டிருப்பவர்கள் அனைவரும் துரித விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அப்பாவி மக்களை விடுவிப்பதற்கான நடவடிக்கையில் உடனடி அக்கறை செலுத்துவதாகவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை -

கைதுசெய்யப்பட்டவர்களின் உறவினர்கள் எம்முடன் தொடர்புகொண்டு விவரங்களைத் தெரிவிப்பதற்காக 011 - 2593515, 0112503467 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு கைதுசெய்யப்பட்டிருப்பவரின் முழுப்பெயர், கைதுசெய்யப்பட்ட இடம், திகதி, அறிந்திருந்தால் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இடம், அடையாள அட்டை இலக்கம், தொடர்புகொள்பவரின் விவரம், எம்முடன் தொடர்புகொள்வதற்கு சிபார்சு செய்தவரின் பெயர் ஆகிய விவரங்களை அறியத் தரலாம் - என்றுள்ளது. (202)

## நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உலக உணவுத்திட்ட நிவாரணம்

யாழ்ப்பாணம்,டிசெ.6

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சகல கிராம அலுவலர் பிரிவுகளிலும் உலக உணவுத்திட்ட நிவாரண விநியோக அட்டைகள் கிராம அலுவலர்களால் வழங்கப்பட்டு வருகின்றன.

நவம்பர் மாதத்திற்கான நிவாரண விநியோகம் நடைபெறுவதால் உடனடியாகக் கிராம அலுவலர்களிடம் இருந்து உலக உணவுத் திட்ட நிவாரண அட்டையினைப் பெற்று நிவாரணத்தினைப் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் பெற்றுக் கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (அ)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் தாதியர் பற்றாக்குறை: அதனால் நோயாளர் சிரமம்

யாழ்ப்பாணம்,டிசெ.6

சாவகச்சேரி மாவட்ட மருத்துவமனையில் தாதிய உத்தியோகத்தர் பற்றாக்குறை நிலவுகின்றது. இதனால் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மருத்துவமனையில் ஆண்கள் விடுதி, பெண்கள் விடுதி, சிறுவர் விடுதி, மகப்பேற்று விடுதி, வெளிநோயாளர் பிரிவு ஆகிய சகல பிரிவுகளிலும் நான்கு தாதிய உத்தியோகத்தர்களே கடமையாற்றுகின்றனர்.

இவர்கள் மாற்று அடிப்படையில் பணியாற்றுவதாலும் விடுதியிலும் வெளிநோயாளர் பிரிவிலும் ஓரே தாதிய உத்தியோகத்தர் கடமையாற்றுவதாலும் வெளிநோயாளர் பிரிவில் ஊசி மருந்து ஏற்றுவதற்கு மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளது என நோயாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (202-207)

# ஊர்காவற்றுறை பிரதேச அபிவிருத்திக்கு பதினெட்டு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

நல்லூர்,டிசெ.6

ஊர்காவற்றுறை பிரதேசத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கென சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 3 லட்சம் ரூபாவையும் தமிழ் கூட் டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் 15 லட்சத்து 3ஆயிரம் ரூபாவும் நிதி ஒதுக்கியுள்ளனர். பன்முகப்படுத்தப் பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து இந்த நிதி ஒதுக்கீட்டைச் செய்துள்ளனர்.

ஊர்காவற்றுறை தும்புத் தொழிற்சாலைக்கு மின்வசதிகளை ஏற்படுத்த சமூக சேவைகள் அமைச்சர் 80ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். அத்துடன் பெரியபுலம் கிராமத்தின் மின்விநியோகத்திற்கென 2லட்சத்து 20ஆயிரம் ரூபா வழங்கியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.கே.சிவாஜிலிங்கம் கூடைப்பந்தாட்ட மைதானம் அமைப்பதற்கென 2 லட்சத்து 50ஆயிரம் ரூபாவும் கே.சிவனேசன் பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கு கணனிக் கொள்வனவுக்கென ஒரு லட்சம் ரூபாவும் பருத்தியடைப்பு எருமைத் தோகைக் குளம் புனரமைப்புக்கு 50ஆயி ரம் ரூபாவும் கரம்பொன் உப்புக்குளம் அணைக்கு ஒரு லட்சம் ரூபாவும் ஒதுக்கியுள்ளனர்.

என்.ஸ்ரீகாந்தா அனலைதீவு சுற்றயல் கூறு வைத்தியசாலை தளபாடக் கொள்வனவுக்கு 2 லட்சம் ரூபாவும் அனலைதீவு மகா வித்தியாலய கல்வி விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கு ஒரு லட்சம் ரூபாவும் எழுவைதீவு பால முன்னேற்ற வேலைகளுக்கு 2 லட்சத்து மூவாயிரம் ரூபாவும் ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை கணனி அறை மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கு 2 லட்சத்து 50ஆயிரம் ரூபாவும் சென்.அன்ரனிஸ் கல்லூரி தளபாடங்கள், கல்வி விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கு ஒரு லட்சம் ரூபாவும் கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயத்திற்கு போட்டோப் பிரதி இயந்திரம் கொள்வனவுக்கு ஒரு லட்சம் ரூபாவும் சின்னமடு றோ.க. பாடசாலைக்குத் தளபாடம் உபகரணங்கள் கொள்வனவுக்கு 50ஆயிரம் ரூபாவும் ஒதுக்கியுள்ளார். (202-111)

## உதவிக் கொடுப்பனவு

வலி.தென்மேற்கு, டிசெ.6

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவைப் பெறுபவர்களுக்கான டிசெம்பர் மாதத்திற்கான கொடுப்பனவு தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-135)

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,டிசெ.6

இளைஞர் கணனிகள் சேவை நிறுவனத்தினர் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை இளவாலை சென்.ஹென்றியரசர் கல்லூரியில் ஐ.சி.ரி. மாணவர்களுக்கு இலவச பயிற்சிப் பட்டறையை நடத்தவுள்ளனர். (202)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## ஜி.சீ.ஈ. பரீட்சை அனுமதி அட்டைகள் விநியோகம்

யாழ்ப்பாணம்,டிசெ.6

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டு வருவதாகப் பாடசாலைகளின் அதிபர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை மாணவர்களுக்கான இலவச சீருடைத் துணிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. (202-207)



கணனிமயப்படுத்தப்பட்ட பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியின் கணனிச் சேவை விழாவில் யாழ். அரச அதிபர் கே.கணேஷ் மங்கள விளக்கேற்றுவதையும் அருட்திரு இருதயதாஸ் அடிகளார், பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம், டாக்டர் கே.மயிலேறும்பெருமாள், நகரசபைச் செயலாளர் ஏ.நடராஜா, மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, தேசிய சேமிப்பு வங்கி உதவி முகாமையாளர் ஆர்.இராஜமகேந்திரசிங்கம் ஆகியோர் அருகில் நிற்பதை முதலாவது படத்திலும் வங்கி முகாமையாளர் எம்.பரமானந்தன் தலைமை உரை நிகழ்த்துவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (218)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) கடந்த 23.11.2007 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா (HNDM) பட்டம் பெற்ற ஏழாலை மேற்கு, ஏழாலையைச் சேர்ந்த

**தம்பு ஸ்ரீகரன்** (B.Com.Acc.Spl)

அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ்வில் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

நண்பர்கள்,
அக்கா (டென்மார்க்),
சுரேந்திரன் (பிரான்ஸ்).

ஏழாலை. (68658)

## வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம் 2008 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறிவித்தல்

ஆதன மீள்மதிப்பிற்கமைவாக இவ்வாண்டு நடைமுறையிலுள்ள ஆதனவரித்தொகைகளே 2008 ஆம் ஆண்டிற்கும் அவ் ஆதனங் களிற்கு செலுத்தப்படற்பாலதென வரியிறுப்பாளர்களுக்கு இத் தால் அறிவிக்கப்படுகிறது.

இவ் ஆதன வரித்தொகைகள் 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31, யூன் மாதம் 30, செம்ரெம்பர் மாதம் 30. டிசெம்பர் மாதம் 31 (இத்திகதிகள் விடுமுறை நாளாகவரின் நேர்முந்திய வேலைநாள்) ஆகிய திகதிகளில் முடிவுறும் காலாண்டிற்கு ஒரு தடவை செலுத்தப்படவேண்டும். இவை ஆண்டுத் தொடக்கத் தில் முழுமையாகவும் செலுத்தப்படலாம். 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஆண்டின் முழு ஆதனவரியையும் செலுத்தினால் 10% வரிக்கழிவும், காலாண்டிற் குரியவரியை அக்காலாண்டின் முதலாம் மாதத்தில் செலுத் தினால் 5% வரிக்கழிவும் வழங்கப்படும்.

காலாண்டு முடிவுறும் திகதிக்கு பின்னர் செலுத்தப்படும் ஆதன வரித் தொகைகளுக்கு பற்றாணை செலவு அறவிடப்படும். இப்பற் றாணைச் செலவு வெற்றுக் காணிகளுக்கும், குடியிருக்கும் ஆதனங் களிற்கும் 15% ஆகவும், ஏனைய ஆதனங்களிற்கு 20% ஆகவும் இருக்கும்.

வரிமதிப்பிற்கு எதிர்ச்சொல்லுதல் ஏதும் இருப்பின் அவை ஒவ் வொரு ஆதனத்திற்கும் தனித்தனியாக இவ் அறிவித்தல் விளம்பர மாகும் திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் இந்நகராட்சி மன்ற அலுவலகத்தில் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

நகராட்சிமன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
2007.11.30 (சி/54617)

கு.அமிர்தலிங்கம்
செயலாளர்,
நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை.


அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

939 நீலம்

வெற்றி இலக்கங்கள்

மிதுனம் 08 10 29 38

04-12-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 4468546 - 4484043

ஜக்பொட் பரிசு ரூபா.2,502,750/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 340,430 | 10/- | 3,404,300/- |
| 2 இலக்கங்கள் | 31,296 | 20/- | 625,920/- |
| 1 இல. + லக்கினம் | 31,023 | 30/- | 930,690/- |
| 2 இல. + லக்கினம் | 2,828 | 100/- | 282,800/- |
| 3 இலக்கங்கள் | 835 | 500/- | 417,500/- |
| 3 இல. + லக்கினம் | 76 | 5,000/- | 380,000/- |
| 4 இலக்கங்கள் | 5 | 100,000/- | 500,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,502,750/- | - |
| மொத்தம் | | | 6,541,210/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 406,498 | | 7,564,710/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,263,200/-

தொடர் இல. 5357562 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2007 டிசெம்பர் 07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 4481593-1-89 |
| மாத்தறை | 4471181-0-21 |
| கொழும்பு | 4480856-6-70 |
| கம்பஹா | 4478682-6-59 |
| பதுளை | 4472275-8-15 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## காசநோய் கருத்தரங்கு

வலி.தென்மேற்கு, டிசெ.6

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத் தியசாலையில் காசநோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதி காரி பணிமனையின் பொறுப்பதிகாரி கே. தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வந்தி ருந்தவர்களும், வைத்தியசாலை ஊழியர்க ளும் கலந்துகொண்டனர். (202-135)

## நாவலர் விழா

யாழ்ப்பாணம், டிசெ.6

உடுவில் இந்து இளைஞர் மன்றம் நடத் தும் நாவலர் விழாவும் பாலர் பாடசாலை மாணவர்களின் பரிசளிப்பு விழாவும் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு உடுவில் மான்ஸ் கல்லூரி மண் டபத்தில் நடைபெறவுள்ளன.

மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ் வில் பிரதம விருந்தினராக யாழ்.செயலக திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் கலந்து கொள்வார். (202)

## வலி.தென்மேற்கில் பால்மா தட்டுப்பாடு

வலி.தென்மேற்கு, டிசெ.6

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் பால் மா வகைகளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இப்பிரதேசத்திலுள்ள பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் ஆகியவற் றின் சங்கக்கடைகளிலும் பால்மா பக்கற்றுக ளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகப் பாவ னையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை குழந்தைப்பிள்ளைக ளுக்கான பால்மா வகைகளுக்கும் தட்டுப் பாடு ஏற்பட்டிருப்பதால் பெற்றோர்கள் பால் மாவைத் தேடி அலைந்து வருகின்றனர்.

சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சில கடைகளில் பால்மா பக்கற்றுக்களை பதுக்கி வைத்து கூடிய விலையில் விற்பனை செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படு கின்றது. (203-135)

## முன்பள்ளி சிறுவர்களிடையே பற்சுகாதாரத்தை மேம்படுத்தும் திட்டம்

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல முன்பள்ளி களிலும் பற்சூத்தை தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருவதாக யாழ்.பிராந்திய சுகாதாரச் சேவைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

சகல முன்பள்ளி ஆசிரியர்களுக்கும், சிறுவர்களுக்கும் பற்களை ஆரோக்கியமாகப் பேணும் செயல்முறை விளக்கங்கள் பாட சாலை பற்சிகிச்சையாளர்கள், பொது சுகா தாரப் பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோ கத்தர்கள் ஆகியோரால் அளிக்கப்பட்டன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல பாடசா லைகளிலும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளால் பாடசாலை மருத்துவ பரிசோதனை கிரமமாக நடத்தப்பட்டு வரு கின்றது. இதன்போது ஆண்டு 1 இல் கல்வி பயிலும் 30-40% மாணவரிடையே பற் சூத்தை இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்தே முன்பள்ளிகளில் விழிப்புணர்வு நிகழ்வு நடத்தப்பட்டது.

பற்சுகாதார மேம்பாட்டை ஊக்குவிக் கும் நோக்கில் யாழ்.மாவட்டத்திலுள்ள 16,420 முன்பள்ளி சிறுவர்களுக்கு பற்தூ ரிகையும், பற்பசையும் இலவசமாக வழங் கப்பட்டுள்ளன. இதில் போரூட் நிறுவனம் 15,081 சிறுவர்களுக்கும் சேவாலங்கா 1,339 சிறுவர்களுக்கும் பற்தூரிகை, பற்பசைகள் வழங்கியுள்ளன என யாழ்.பிராந்திய சுகா தார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (202)

## கண்ணீர் அஞ்சலி

*எமது பாடசாலை ஆசிரியை செல்வி உமா சிவஞானம் அவர்களின் அன்புத் தந்தை*

**முத்துக்குமார் சிவஞானம்**

*அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

ஆசிரியர் கழகம்,
யா/ கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம். (சி/54614)

## 45 ஆம் நாள் நினைவலைகள்

மண் மகிழ 23 . 12 . 1982



கண் நெகிழ 23 . 10 . 2007

**செ.கிறிஸ்ரி ஜெயந்தன்**

(உரிமையாளர், வின்ரெல் கொம்பியூட்டர் ரெக்னோலஜி)

*கிள்ளை மொழி பேசி*
*கீர்த்தியோடு வாழ்ந்தாய் கிறிஸ்ரி- உனக்காய்*
*கண்ணீர்ப் பூக்கள் சிந்தி*
*கவலையோடு உருகுகின்றோம் மெழுகாய்*

120, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (68654)

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 . 03 . 1925



உதிர்வு 17 . 11 . 2006

**அமரர் வேலுப்பிள்ளை தங்கராஜா**

(Retd. M.L.T)

திதி: அபரபட்ச துவாதசி

ஆண்டொன்று சென்றாலும் அப்பா!
ஆறாது எம் துயரம்
அறிவின் சிகரமாய், பண்பின் இலக்கணமாய்
பாசத்தின் உறைவிடமாய்
நன்னெறி தவறாது வாழ்ந்து
எமக்கு வாழ வழிகாட்டிய
அன்புத் தெய்வத்தின் ஆத்மா
சாந்திபெற எல்லாம் வல்ல
இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

பத்தமேனி,
அச்சுவேலி. (68645)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### தம்பிப்பிள்ளை நாகலிங்கம்

சுன்னாகம், முடவேம்படியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை நாகலிங்கம் நேற்று (05.12.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை- செல்லமுத்து தம்ப தியரின் அன்பு மகனும் பராசக்தியின் பாசமிகு கணவரும் வசந்த மலர், சாந்தமலர் (ஆஸ்திரேலியா), லலிதா (லண்டன்) ஆகியோ ரின் பாசமிகு தந்தையும் இரத்தினம், சுபராம், ஸ்ரீரமணாநந்தன் ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான பாலாமணி, கந் தையா, சின்னம்மா, இராசம்மா, குமாரு மற்றும் செல்லத்துரை ஆகியோரின் சகோதரனும் தனுஜன், அபர்ணா, அபிராமி, விபு சன், விதுஷா, விதுரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2007) வியாழக் கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு.கமலநாதன்.
(வட பிராந்திய போக்குவரத்துச் சபை- சாரதி),
வசந்தமலர் (மகள்).

முதலியார் வளவு,
K.K.S. வீதி,
யாழ்ப்பாணம். (68656)

### சுப்பையா நல்லம்மா



தாவடி வடக்கு, காளிகோயிலடியைச் சேர்ந்த சுப்பையா நல்லம்மா (02.12.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையாவின் அன்பு மனைவியும் கோண்டாவிலைப் பிறப் பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து- அன்னப்பிள்ளை தம்பதியரின் மகளும் சபா பதி- அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற பவளத்தின் சகோதரியும் ஜெகசோதி, மகாராணி, புஷ்பராணி, கமலாதேவி, கெங்காதரன், ஜெகநாதன், புனிதவதி, பரந்தாமலர் ஆகியோரின் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2007) வியாழக் கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி,
தாவடி வடக்கு, தாவடி. (68657)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்திய

# 13 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டம் தேவரையாளி இந்துக் கல்லூரி சம்பியன்

வலி.வடக்கு,டிசெ.6

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய 13 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியும் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

ஆரம்பம் முதல் இறுதிவரை இரு அணிகளும் சளைக்காமல் விளையாடினார்கள். இரு அணிகளும் கோல் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காகச் சமநிலை உடைப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இரு அணிகளும் தமக்கு வழங்கப்பட்ட முதல் பத்து உதைகளையும் உரிய முறையில் பயன்படுத்தாமல் தவறவிட்டதும் கோல் காப்பாளர்களினால் தடுத்து நிறுத்தப்பட்டமையாலும் பத்து உதைகளின் போதும் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறவில்லை. தொடர்ந்து பதினோராவது உதையை மானிப்பாய் இந்துக் கல்லூரி தவறவிட்டதையடுத்துத் தேவரையாளி இந்துக் கல்லூரி அதனை உரிய முறையில் பயன்படுத்தி ஒரு கோலைப் போட்டது.

இதனைத் தொடர்ந்து தேவரையாளி இந்துக் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் வென்று சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் மோதிக் கொண்டன. இரு அணிகளும் ஆட்டம் முடிவடையும் வரை கோல்கள் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தமையால் சமநிலை உடைப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் மகாஜனக் கல்லூரி 3:2 என்ற கோல் கணக்கில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியை வென்று 3ஆம் இடத்தைப் பெற்றது. (50-86)




## கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் சம்பியன்

வலி.வடக்கு,டிசெ.6

யாழ்.நகர் மைய றோட்டரிக் கழகம் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கூடைபந்தாட்டப் அணிகளுக்கு இடையில் நடத்திய போட்டியில் யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை அணி சம்பியனானது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியும் யாழ்ப்பாணம்திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையும் மோதிக்கொண்டன.

திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலை ஆட்ட முடிவில் 26:13 கூடைகள் என்ற கணக்கில் உடுவில் மகளிர் கல்லூரியை வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

ஆட்டநாயகியாக திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலையைத் சேர்ந்த செல்வி மொறின் தெரிவுசெய்யப்பட்டார்.

தொடர் ஆட்ட நாயகியாக உடுவில் மகளிர் கல்லூரி அணித்தலைவி செல்வி கீதா தெரிவுசெய்யப்பட்டார்.

(50-86)

## ஆரம்பப் பிரிவு தாச்சிப் போட்டியில் மானிப்பாய் மெமோறியல் சம்பியன்

வலி.வடக்கு,டிசெ.6

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான தாச்சிச் சுற்றுப்போட்டியில் ஆண்கள் பிரிவில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை கோட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் சண்டிலிப்பாய் கிழக்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையும் பங்குபற்றின.

இரு அணிகளும் பலத்த போட்டியுடன் பழம் பெறுவதில் முயற்சிகளை மேற்கொண்டன.

ஆட்டமுடிவில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை 2:1 என்ற பழக்கணக்கில் சண்டிலிப்பாய் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையை வெற்றிகொண்டு கோட்டச் சம்பியனானது.

மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் பெரியவிளான் றோமன் கத்தோலிக்க வித்தியாலயமும் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

ஆட்டமுடிவில் இரு அணிகளும் தலா இரண்டு பழங்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக மேலதிக நேரம் வழங்கப்பட்டன. இரு அணிகளும் மேலதிக நேரத்தின்போதும் மேலதிகமாக பழங்கள் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் நிறைவுபெற்றது. இதனைத் தொடர்ந்து இரு அணிகளும் 3ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்ட அணிகளாகத் தெரிவுசெய்யப்பட்டன. (50-86)

## ஆசிரியர்களுக்கான மெய்வன்மைப் போட்டி மூன்று பதக்கங்களை வென்றார் மிதிலா



யாழ்ப்பாணம்,டிசெ.6

அரச பாடசாலை ஆசிரியர்களுக்கான தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டியில் யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலை ஆசிரியை திருமதி மிதிலா ரமணன் இரண்டு தங்கப் பதக்கங்களையும் ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் வென்றுள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற இந்தத் தேசிய மட்டப் போட்டியில் பங்குகொண்ட திருமதி மிதிலா 100 மீற்றர், 200 மீற்றர் ஆகிய ஓட்டப் போட்டிகளில் தங்கப் பதக்கங்களையும் நீளம் பாய்தலில் வெள்ளிப்பதக்கத்தையும் வென்றுள்ளார்.

இவர் யாழ்.பல்கலைக்கழக மாணவியாக இருந்த காலத்திலும் அகில இலங்கைப் பல்கலைக்கழகப் போட்டிகளில் பங்குபற்றி பல தடவைகள் பரிசுகளை வென்றமை குறிப்பிடத்தக்கது. (50)

# கண்மூடித்தனமாக சோதனைச் சாவடிகள் அமைப்பது அடிப்படை உரிமை மீறலாகும்

## உயர்நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு,டிச.6

சோதனைச்சாவடிகள், தடைநிலைகளைக் கண்மூடித்தனமாக அமைப்பது பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தவது அரசமைப்பின் கீழ் மக்களுக்கு அளிக் கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறும் நடவடிக்கையாகும்.

-இவ்வாறு தெரிவித்திருக்கின்றது உயர் நீதிமன்றம்.

அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றில் கடந்த திங்களன்று தீர்ப்பு வழங்குகையிலேயே இந்தக் கருத்தை பிரதம நீதியசர் சரத் என் சில்வா, நீதியர்சர்கள் ஷிராணி திலகவர்த்தனா, ஜகத் பாலபட்டபெந்தி ஆகியோரைக் கொண்ட உயர்நீதிமன்ற ஆயம் இவ்வாறு குறிப்பிட்டது.

* சோதனைச் சாவடிகள், தடைநிலைகள், போக்குவரத்துக்குக் குறுக்கான காவலரண்கள் என்று மக்களின் போக்குவரத்தை வழிமறிப்புச் செய்வது அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறும் செயல்பாடு.

* வீதி மறிப்புகள், வாகனத்தரிப்பு வழியை ரத்துச் செய்தல், போக்குவரத்துத் தடைகள் என்பன கண்மூடித்தனமாகச் செய்யப்படக்கூடா. அவை மோட்டார் போக்குவரத்துச் சட்ட விதிகளுக்கு அமையவே மேற்கொள்ளப்படவேண்டும்.

* மிக முக்கிய பிரமுகர்களின் போக்குவரத்து மற்றும் நடமாட்டங்களை வழமையாக மக்கள் அதிகம் நடமாடும் நேரங்களிலும் இடங்களிலும் சாதாரணமாக மேற்கொள்ளாமல் தவிர்க்கச் செய்து கொள்ள வேண்டும்.

- இவ்வாறு தனது தீர்ப்பில் வலியுறுத்திய உயர்நீதிமன்றம் இந்தப் பணிப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்களைப் பொலிஸ் மா அதிபர், பாதுகாப்புச் செயலாளரோடு கலந்து பேசி வகுத்துக்கொள்ளவேண்டும் என்றும் உத்தரவிட்டது.

இத்தீர்ப்புக்குரிய அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை பாணந்துறையைச் சேர்ந்த றொட்ரிகோ என்பவர் தாக்கல் செய்திருந்தார்.

மனுவை விசாரித்த நீதிமன்றம் மேற்படி மனுதாரரின் அடிப்படை உரிமைகளை மீறி, அவரைத் துன்புறுத்தி, சட்டவிரோதமாகத் தடுத்த வைத்தமைக்காக மேற்படி பொலிஸ் நிலையத்தின் நான்கு பொலிஸ் அதிகாரிகளும் தலா 75 ஆயிரம் ரூபா வீதம் மொத்தம் 3 லட்சம் ரூபாவை மனுதாரருக்கு நஷ்ட ஈடாக வழங்க வேண்டும் என்றும், அரசும் அவருக்கு இருபத்தியையாயிரம் ரூபா நஷ்ட ஈடு அளிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

(சி)

## 'புலிகளின் குரல்' மீதான தாக்குதலுக்கு 'யுனெஸ்கோ' கண்டனம்

கொழும்பு, டிச.06

'புலிகளின் குரல்' மீதான தாக்குதல் தொடர்பாக யுனெஸ்கோ அமைப்பு கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அமைப்பின் செயலாளர் நாயகம் கொய் சிரோ மற்சூரா கூறியதாவது:-

ஜெனிவா விதிகளின்படி,பொதுமக்களுக்குத் தகவல்களை வழங்கும்பொது ஊடகங்கள் - அவை வெளியிடும் கருத்துகள் எந்த வகையாக இருந்தாலும் - அவற்றின் மீது இராணுவத் தாக்குதல்களை நடத்துவதற்கு அனுமதியில்லை.

எனவே, 'புலிகளின் குரல்' வானொலி நிலையம் மீதான தாக்குதலை இலங்கை அரசு எவ்விதத்திலும் நியாயப்படுத்த வாய்ப்பில்லை. அடிப்படை மனித உரிமை மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்கு அரச அதிகாரிகள் மதிப்பளிக்க வேண்டும் - என்றார் அவர்.

(சி)

## இறைவனை எப்படிக் காணலாம்

*இறைவன் முதலில் தாய் வடிவில்தான் காட்சி அளிக்கின்றான். ஈஸ்வரனைக் காண வேண்டுமெனில் கைலாசம் போக வேண்டும். எங்கேயிருக்கிறது கைலாசம்? உன் இதயமே கைலாசம். எங்கெங்கோ யாத்திரைகள் மேற்கொள்கின்றோம். கோயிலுக்குப் போகின்றோம் என்ன பயன்? அறிவியலும்கூட இப்படித்தான் இருக்கின்றது. லட்சக்கணக்கான மைல்கள் அண்டவெளியில் பயணம் செய்கிறார்களே தவிர தன்னுள்ளே பயணிக்கிறார்களா? எவ்வளவோ மடங்களுக்கு யாத்திரை போகிறார்கள். எந்த மடத்துக்குப் போய் என்ன பயன். நீ விரும்பும் கடவுள் உன் இதயத்தினுள்ளே இருக்கிறார். ஆகவே உன் இதய ஸ்தானத்தை நீ கவனிக்க வேண்டும். எவ்வாறு அதில் அமர்ந்திருக்கின்றார் என்பதைக் கவனித்துப் பார். எப்படிப்பட்ட எண்ணங்கள் அதில் எழுகின்றன என்பதை உன்னிப்பாகக் கவனி. அப்போதுதான் நீ சரியான வழியில் செல்வதாக அர்த்தம். ஒவ்வொரு மனிதனும் தெய்வ ஸ்வரூபமே. ஒருவரையும் புண்படுத்தக்கூடாது. யாரையும் விமர்சிக்கக் கூடாது. யாரையும் ஏமாற்றக் கூடாது. யார் மனதையும் நோகடிக்கக்கூடாது. நீயும் புண்படுத்தாமல் பார்த்துக் கொள். இதை விட உயர்ந்த பக்தி வேறெதுவும் இல்லை.*



சாயி சிந்தனை

# பொட்டம்மானைக் கொல்வதே புலிகளை முடிப்பதற்கு ஒரேவழி!

## அமைச்சர் டக்ளஸ் சொல்கிறார்

கொழும்பு,டிச.6

''தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு ஒரேவழி அதன் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மானைக் கொல்வதுதான்!''

- இப்படி உபாயம் கூறியிருக்கின்றார் சமூகசேவை, சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கத்தில் அதன் தலைவர் வே. பிரபாகரனையும் ஏனையோரையும் வழிநடத்துபவர் அதன் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மான்தான். ஆகவே, அந்த இயக்கத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஒரே வழி பொட்டம்மானைக் கொல்வதுதான்.

பிரச்சினை பிரபாகரனிடமும் பொட்டு அம்மானிடமும்தான் தங்கிக் கிடக்கின்றது. புலிகளுக்கு பொட்டு அம்மான்தான் எல்லாம். அவர் இல்லாவிட்டால் அந்த இயக்கம் குழம்பிப்போயிருக்கும். அவ்வளவு தூரம் இரத்த தாகம் கொண்டவர் அவர்.

அரசுத் தரப்பால் தமிழ்ச் செல்வனைக் கொல்ல முடிந்திருப்பதால் பிரபாகரனையும், பொட்டு அம்மானையும் கூட கொல்ல் முடியும் என நான் கருதுகின்றேன்.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னி மக்கள் புலிகள் மீது அதிருப்தி அடைந்துள்ளார்கள். ஆனால் அவர்கள் ஒன்றும் செய்ய முடியாத - உதவியற்ற - நிலையில் உள்ளனர். அரசுக்கு உளவுத் தகவல்களை அந்த மக்களே வழங்குகின்றனர்.

- இவ்வாறு மேலும் தெரிவித்துள்ளார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

செவ்வாய்க்கிழமைதோறும் கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே மேற்படி சாரப்பட கருத்து வெளியிட்டிருக்கின்றார் அமைச்சர்.

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாத நினைவுகளில் ஆண்டொன்று



மண்ணுலகில் மேன்மையுடன்
நாம் வாழ
குலவிளக்காய் திகழ்ந்தீரே!
விண்ணுலகம் சென்ற நீங்கள்
நலமுடனே வாழ்கவென
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கண்ணீர்விழிகளுடன் உங்கள்
நினைவுகளைச் சுமந்தபடி:
அன்பு மனைவி -ருக்மணி,
அருமைச் செல்வங்கள்-
கோகுலன், சியாமளன், மதுரன்
(நியூசிலாந்து).
பாசமுள்ள சகோதரர்கள்.

## அமரர் சிவபாதசுந்தரம் ஞானேஸ்வரன் (என்ஜினியர்)

மலர்வு: 26.04.1945 உதிர்வு: 01.12.2006

திதி: துவாதசி 06.12.2007

(பி/54612)

# நெஞ்சகலா நினைவலைகள்

பதினொராம் ஆண்டு

தோற்றம் 15 08 1912 — மறைவு 10 03 1996



அமரர் செல்லத்துரை சிவபாதசுந்தரம்

பதினைந்தாம் ஆண்டு

தோற்றம் 11 10 1921 — மறைவு 04 02 1992



அமரர் இரத்தினம்மா சிவபாதசுந்தரம்

யாவர்க்கும் இனியவர்களாய் வாழ்ந்து
மண்ணில் மறைந்து விட்ட போதிலும்
நெஞ்சில் எழுதி வைத்த உங்கள் நினைவுகள்
உயிரோடு வாழும்.

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

குளங்கரை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

அவனியில் 10 ★ 07 ★ 1920



அவனடியில் 27 ★ 11 ★ 2005

## திருமதி பொன்னம்மா சின்னத்துரை

திதி : அபரபக்க துவாதசி(06.12.2007)

பாசத்தின் உறைவிடமாய்
எங்களுடன் வாழ்ந்து மறைந்த
எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் நினைவுகள் எக்கணமும்
எம்மை விட்டுப் பிரியாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

15, ஆடியபாத றோட்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
(பி/54606)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## ஐயப்பன் ஆலயத்தில் பெருந் திருவிழா

யாழ். கோண்டாவில் அருள்மிகு சபரீ சஐயப்பன் ஆலயத்தில் நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாகராஜா பூஜையும், எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு மகசீசகாரமும் (வேட் டைத்திருவிழா) எதிர்வரும் திங்கட் கிழமை பிற்பகல் 2 மணிக்கு 'மஞ்சமாதா' பூஜையும் நடை பெறவுள்ளது.
(202)

## கோழிக்குஞ்சு விநியோகம்

PIRIMA சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 10.12.2007 மாலை விநியோகிக் கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

றாஜீவ்,
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
(68634)

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.

றாஜீவ்,
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
P. ரவி, தாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
(68633)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 07 1947



மறைவு 06 12 2006

## அமரர் அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் குணசீலன்

(முகாமைத்துவ உதவியாளர், யாழ்.போதனா வைத்தியசாலை)

*கண்மணி போல் எம்மை காலமெல்லாம் காத்தீர்*
*தரணியிலே எம்மை தலைநிமிர வைத்தீர்*
*அன்பு, அமைதி, அடக்கம், கடமை*
*உங்கள் உருவம்*
*ஆருயிரே அப்பா ஏன் பிரிந்தீரோ?*

கரணவாய் மத்தி,
கரவெட்டி.
(68619)

மனைவி,
பிள்ளைகள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 13 ⊙ 01 ⊙ 1973

மறைவு 06 ⊙ 11 ⊙ 2007



## நெஞ்சமெல்லாம் உங்கள் நினைவு

கண்களிலே ஊற்றெடுக்கும் நீரில் உங்கள்
கனிந்தமுகம் மிதந்துவரக்..... கதறுகின்றோம்
துன்பத் தீ மூட்டி எம்மைத் துடிக்க வைத்து
தொலைதூரம் சென்றாலும்..... உங்கள் நினைவே
விண்வெளியாய் நெஞ்சமெல்லாம் விரிந்து நிற்கிறது
விதியழைக்கும்.....! விம்மியழும் காலம் ஒரு நாள்
மண்ணில்வரும்..... என்று சிறுகனவு கூட
மனத்திரையில் வீழ்ந்ததில்லை! என்ன செய்வோம்?
அன்புருவே.....! இதயமெங்கும் நீங்கள் சுமந்த
ஆசைகளை நிறைவு செய்வோம்..... அமைதி காண்போம்!
பண்புமிகு பவானியம்மா! மாதம் ஒன்று
பயணித்து முடிந்ததம்மா! பாச ஆத்மா
சென்று சிவன் பாதத்தை பற்றி நின்று
செம்மையுடன் சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

எமது பாசவிளக்கு மரணமடைந்த செய்தி கேட்டு உடன் வந்தும் தொலைபேசி, கடிதமூலமும் மீளாத்துயருற்றிருக்கும் எமக்கு ஆறுதல் ஒத்தடங்கள் தந்த, தந்து கொண்டிருக்கின்ற அனைத்து உள்ளங்களுக்கும் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (06.12.2007) எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அந்தியேட்டி கிரியைகளிலும் மதியபோசன நிகழ்விலும் தவறாது கலந்து கொண்டு எமது அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக இறைபதம் இறைஞ்சுமாறு தாழ்மையுடன் வேண்டிக்கொள்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தயவுசெய்து எமது தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

வல்லை வீதி,
தொண்டைமானாறு.
(68518)

*அன்புக் கணவர்:* ஆ. பிராபானந்தன்,
*பிள்ளைச் செல்வங்கள்:* பி.பிரபானுசன், பி.பிரதிக்ஷா.

## திருமதி பவானி பிரபானந்தன்

(ஆசிரியை, அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## அப்பாவிகள் என நிரூபிக்கப்படும்வரை தமிழர்கள் இங்கு பயங்கரவாதிகளே!

'பிரஜை ஒவ்வொருவரும் அவர் சட்டத்தின் கீழ் குற்றவாளி என்பது ஐயத்துக்கு அப்பால் நிரூபிக்கப்படும்வரை அப்பாவியாகவே கருதப்படவேண்டும்' - என்பதுதான் பொதுவான சட்டவிதி; ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமை; இயற்கை நீதி.

ஆனால் தலைநகர் கொழும்பிலும் புற நகரங்களிலும் தமிழர்கள் என்பதற்காகவே ஆயிரக்கணக்கில் ஆள்கள் கைது செய்யப்படுவதையும், அரசு 'பயங்கரவாதிகள்' எனக் குறிப்பிடும் விடுதலைப் புலிகளுக்கும் இவ்வாறு கைது செய்யப்படுவோருக்கும் இடையில் தொடர்புகள் ஏதும் இல்லை என்பது நிரூபிக்கப்படும்வரை, இவ்வாறு கைது செய்யப்படுவோர் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்படுவதையும் நோக்கும்போது தமிழர் விவகாரத்தில் மட்டும் மேற்படி இயற்கை நீதி மாறிவிட்டதோ என்ற சந்தேகம் எழுகின்றது.

இந்தக் கைதுகளை நோக்கினால் 'தமிழர்கள், அவர்கள் அப்பாவிகள் என்பது நிரூபிக்கப்படும்வரை பயங்கரவாதிகளாகக் கருதப்படவேண்டியவர்கள்' - என்ற புதிய நீதிச் சித்தாந்தத்தில், 'அறநெறித் தத்துவத்தில்' தென்னிலங்கைச் சிங்கள அரசு செயற்படுகின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

தமிழர்கள் என்பதற்காக ஆள்கள் கைதுசெய்யப்படுவதும் -

இவ்வாறு கைது செய்யப்பட்டோர் தடுத்து வைக்கப்பட்டு, விசாரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர் என அரசுத் தரப்பில் அறிவிக்கப்படுவதும் -

இந்தப் 'புதிய சட்டமுறைமை' நடைமுறைக்கு வந்துவிட்டது என்பதையே உறுதிப்படுத்துகின்றன.

தென்னிலங்கை அரசுத் தலைமையின் புதிய கண்டுபிடிப்புச் சித்தாந்தத்தின் கீழ் செயற்படுத்தப்படும் இத்திட்டத்தின்படி காரணம் ஏதுமின்றி அள்ளப்படும் தமிழர்கள், தடுப்பு முகாம்களில் அனுபவிக்கும் சித்திரவதைகள், தொல்லைகள், தொந்தரவுகள், கஷ்டங்கள் சொல்லுந்தரமன்று.

கண்மூடித் தனமாகத் தமிழ் மக்கள் கைது செய்யப்படுவதைக் கண்டித்துள்ள சுதந்திர ஊடக இயக்கம் இத்தகைய கைதுகள், தடுத்து வைப்புகள், தொந்தரவுகள் போன்ற மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கு பிரேரிக்கப்பட்டிருக்கும் சர்வதேச ஆலோசனை ஒன்றையும் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

கடந்த ஒக்ரோபரில், சித்திரவதைகள் தொடர்பான ஐ.நா. செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி மன்பிரட் நெவாக் இலங்கைக்கு வந்திருந்தார். இலங்கையில் விவகாரங்களை அவதானித்த பின்னர், இவ்வாறு தடுப்பு முகாம்களில் பொதுமக்கள் படும் கஷ்டங்களை நீக்கி, அவர்களின் மனித உரிமைகள் பேணப்படுவதை உறுதிப்படுத்த அவர் ஓர் ஆலோசனை தெரிவித்தார்.

'நாட்டில் உள்ள எந்தத் தடுப்பு முகாமுக்கும், எந்நேரத்திலும், முன்னறிவித்தலின்றி, தவறாது சென்று, அங்குள்ள தடுப்புக்காவல் கைதிகளைச் சந்தித்துப் பேசி, சுதந்திரமான மருத்துவ பரிசோதனைகளுக்கு அவர்களை உட்படுத்தி, உண்மை நிலைவரத்தைக் கண்டறிந்து வெளியிடுவதற்கு சட்ட அதிகாரத்துடன் கூடிய சுயாதீனமான - செயல்வலுவுள்ள - ஒரு தடுப்புப் பொறிமுறை (அமைப்பு) அவசியம். அத்தகைய ஏற்பாடு இல்லாத நிலைமையே குடிமக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. - என்று ஐ.நா. பிரதிநிதி வெளியிட்ட கருத்தையே இப்போது சுதந்திர ஊடக இயக்கம் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

அதேசமயம், இந்நாட்டில் நிலவும் மனித உரிமைகள் நிலைப்பாட்டைக் கண்காணிக்கும் ஆணையோடும், எல்லா இடங்களிலும் மோற்கொள்ளப்படும் தடுப்பு நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வதற்கான அதிகாரத்தோடும் கூடிய ஐ.நா. தூதரக அலுவலகமொன்று கள நிலைமையைக் கண்காணிப்பதற்காக அமைக்கப்படவேண்டும் என்றும் அந்த அமைப்புக் கோரியிருக்கின்றது.

சிறுபான்மையின மக்களின் கௌரவம், உரிமைகள் ஆகியவற்றை துச்சமாக மதித்துச் செயற்படும் ஓர் அரசின் ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகளுக்கு எதிராகக் காத்திரமான நடவடிக்கைகளை இத்தகைய அமைப்புகளை செயற்பட அனுமதிப்பதன் மூலமே உறுதிப்படுத்த முடியும் என்றும் சுதந்திர ஊடக இயக்கம் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றது.

தொடர்ந்து சிறுபான்மையினரான தமிழர்களை அடக்கி, ஒடுக்கி, அராஜகம் புரிந்து, ஆக்கிரமித்து வரும் கொழும்பு அரசு தனது அத்துமீறல்களை சர்வதேச மட்டத்தில் அம்பலப்படுத்தக்கூடிய இத்தகைய ஏற்பாடுகளுக்குத் தானாக இணங்கமாட்டாது என்பது திண்ணம். நாட்டின் இறைமை என்ற புளித்துப்போன காரணத்தைக் காட்டி இத்தகைய கோரிக்கைகளை அது நிராகரித்து வருகிறது. இனியும் நிராகரிக்கும் என்பதும் நிச்சயம்.

மனித உரிமைகளைப் பற்றி அதிகம் - அடிக்கடி - பீற்றிக் கொள்ளும் சர்வதேசம், அதிலும் குறிப்பாக மேற்குலகம், இந்தக் கோரிக்கைக்கும், அதை நிராகரிக்கும் இலங்கை அரசின் போக்குக்கும் என்ன பதில் கூறப்போகின்றது?

### உயிர் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் துணிச்சலுடன் பணியாற்றும்

# கூட்டமைப்பு தமிழ் ஊடகவியலாளர்களுக்கு தலைவணங்குவதாகக் கூறுகின்றார் மாவை

கொழும்பு,டிசெ.6

'புலிகளின் குரல்' வானொலி நிலையம் மீது மேற்கொள்ளப் பட்ட விமானத்தாக்குதலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகவும் வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ளது.

கொலை மிரட்டல்கள் மத்தியில் மிகத் துணிச்சலுடன் செய்திகளை வெளியிடும் தமிழ் ஊடகங்களுக்குத் தலைவணங்குவதாகவும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இவ்விடயங்களைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஊடக சுதந்திரத்தைப் பாதுகாப்பதாக அரசு வாய்கிழியக் கூறிவருகின்ற போதிலும், ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தல்களையே எதிர்கொண்டு நிற்கின்றனர்.

நிமலராஜன், சிவராம் உட்பட்ப பல தமிழ் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் தொடர்பான விசாரணைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை.

தொடர் உயிர் ஆபத்துக்கு மத்தியிலும் தமிழ் ஊடகங்கள் மிகத் துணிச்சலுடன் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. அவ்வாறான ஊடகங்களுக்கு நாம் தலைவணங்குகின்றோம்.

'புலிகளின் குரல்' வானொலி நிலையம் தாக்கப்பட்டமைக்கு 'யுனெஸ்கோ' நிறுவனம் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. அதேபோல் நாமும் எமது கண்டனத்தைத் தெரிவிக்கிறோம்.

தமிழர்களின் கலை, இலக்கியம், பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகள் போன்றவற்றைப் 'புலிகளின் குரல்' வானொலி வெளிப்படுத்தி வந்தது.

தமிழ் மக்களுக்கு மிகவும் ஆதரவான வகையில் செயற்பட்டு வந்த தன் காரணத்தாலேயே 'யுனெஸ்கோ' நிறுவனம் அவ்வானொலி நிலையம் தாக்கப்பட்டமைக்குக் கண்டனத்தைத் தெரிவித்தது.

அரச படைகளுடன் சேர்ந்தியங்கும் ஆயுதக்குழுக்களே ஊடகவியலாளர்களின் கொலைக்குக் காரணம் என்பது கண்டறியப்பட்டுள்ளது. இருந்தும் அரசு இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அதிகமாக வடக்கு - கிழக்கைச் சேர்ந்த தமிழ் ஊடகவியலாளர்களே சுட்டுக்கொல்லப்படுகின்றனர். இதனால் பல ஊடகவியலாளர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுவிட்டனர்.

ஊடகவியலாளர்களுக்கு மிக ஆபத்தான நாடு இலங்கை என சர்வதேச ஊடக நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

தமிழர்களை அரசு கைதுசெய்த போது அவர்களின் பெற்றோர்கள் ஜனாதிபதியைச் சந்திப்பதற்காக அலரி மாளிகைக்குச் சென்றனர். அவர்கள் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டனர். இந்தச் சம்பவத்தை தைரியத்துடன் எழுதிய ஊடகவியலாளர்களை நான் பாராட்டுகிறேன். - என்றார்.(சி)




வவுனியாவிலிருந்து ஆறு நோயாளர்களுடன் கொழும்புக்கு சென்ற அம்புலன்ஸை நேற்று கொழும்பு வைத்தியசாலைக்கு சமீபமாக வைத்து படையினர் சோதனையிட்டனர். அம்புலன்ஸில் வெடிகுண்டுகள், ஆயுதங்கள் இருக்கின்றனவா என்று படையி னர் துருவுவதைப் படத்தில் காணலாம்.

## பலாலி கலாசாலையில் இன்று ஒளிவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.6

பலாலி ஆசிரிய கலாசாலையில் ஒளிவிழா நிகழ்வுகள் இன்று காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் அருட்திரு. அன்ரன் மத்தியாஸ் கலந்து கொள்வார். (1)

## கொக்குவில் இந்து தரம் 11 மாணவருக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.6

கொக்குவில் இந்துக் கல்லூரியில் தரம் 11 வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களை இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலைக்குச் சமுகமளிக்குமாறு அதிபர் ஏ்.அகிலதாஸ் கேட்டுள்ளார். (203)

## டச்சு வீதியில் வைத்து இளைஞர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்,டிசெ.6

சண்டிலிப்பாய், உடுவில் - டச்சு வீதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவத்தின் போது சங்கானை பட்டினசபை வீதியைச் சேர்ந்தவரான வேலாயுதம் ஜெயகிரி (வயது 28) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டதாக இனங்காணப்பட்டுள்ளது.

விசாரணையின் பின்னர் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப் பட் டுள்ளது.

இவர் கடந்த சில மாதங்களாக படை முகாம் ஒன்றுக்கு சென்று கையொப்பம் இட்டு வந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-203-29-86)

## நாளை

கார்த்திகை - 21 வெள்ளிக்கிழமை
07.12.2007
திதி : திரயோதசி மு.இரவு 07.44
நட்சத்திரம் : விசாகம்
முழுவதும்
சுபநேரம் : 06.17 - 07.47
ராகுகாலம் : 10.47 - 12.17

## மலேசியத் தூதுவருடன் இந்திய அதிகாரிகள் பேச்சு

புதுடில்லி,டிசெ.6

இந்திய வம்சாவளியினர் மலேசியாவில் அல்லற்படுவது குறித்து புதுடில்லியிலிருக்கும் மலேசியத் தூதரை மத்திய வெளியுறவுத் துறை அமைச்சு அழைத்து தன் கவலையை வெளியிட்டுள்ளது. டில்லியிலுள்ள மலேசியத் தற்காலிக தூதர் நேற்று முன்தினம் வெளியுறவுத்துறை அமைச்சுக்கு அவசரமாக அழைக்கப்பட்டார். அப்போது மலேசியாவில் இந்திய வம்சாவளி மக்கள் நடத்தப்பட்ட் விதம் குறித்து இந்தியாவில் கவலை எழுந்துள்ளது பற்றி தெரிவிக்கப்பட்டது. இதற்கு பதிலளித்த மலேசியத் தூதர், ''நிலைமை சீரடைவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் மலேஷிய அரசு எடுக்கும் '' - என்று உறுதி அளித்தார்.

இந்தத் தகவலை வெளியுறவுத்துறைச் செயலாளர் சிவசங்கர் மேனன் டில்லியில் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,''மலேசியாவில் நடந்தது உள்நாட்டு பிரச்சினை என்பதை இந்தியா ஒப்புக் கொள்கிறது. அதே நேரத்தில் அங்கு வாழும் இந்திய வம்சாவளி மக்கள் தங்களை அரசே பாரபட்சமாக நடத்துகிறது என்று குற்றஞ் சாட்டுகின்றனர். இந்த நிலைவரத்துக்கு இங்குள்ள அரசியல் கட்சிகள் தெரிவித்துள்ள கண்டனத்தையும்,கவலையையும் மலேசியத் தூதரிடம் தெரிவித்தோம். நிலைமை சீரடைய எல்லா நடவடிக்கையும் எடுக்குமாறு கேட்டுக் கொண்டோம். ஆனாலும்,இது மலேசிய உள்விவகாரம் என்பதால் ஓரளவுக்குத் தான் செயல்பட முடியும் என்று அரசு கருதுகிறது'' - என்றார். (சி)

## இன்றும் நாளையும் பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,டிசெ.6

யாழ்.பிரதேச செயலக கலாசார பேரவை நடத்தும் நாடக, இசைநாடக நாட்டுக்கூத்து பயிற்சிப் பட்டறை இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப்பட்டறை 128, டேவிற் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள கலைத்தூது அழகியல் கல்லூரியின் கலைக்கோட்ட மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.(அ-1)

## பங்கீட்டு அடிப்படையில் அரிசி, கோதுமை மா, சீனி

யாழ்ப்பாணம்,டிசெ.6

குடாநாட்டுக்கு கப்பல்கள் மூலம் எடுத்துவரப்பட்டுள்ள சிவப்பு நாட்டரிசி, தீட்டல் பச்சை அரிசி, கோதுமை மா, சீனி, பருப்பு ஆகியன பங்கீட்டு அடிப்படையில் ப.நோ.கூ. சங்கக் கிளைகள் மூலம் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பொருள்களை விற்பனை செய்வதற்கு 24 ப.நோ.கூ. சங்கங்களுக்கும் பொருள்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் -

இன்று காலை 9 மணிக்கு செயலகத்தில் வழங்கற்கட்டளைகளைப் பெற்று பொருள்களைக் களஞ்சியத்தில் பெற்று விநியோகம் மேற்கொள்ளுமாறும் யாழ்.செயலக திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் கேட்டுள்ளார்.(அ-1)

## பெண் உட்பட இருவர் சரண்; ஒருவரைக் காணவில்லை

யாழ்ப்பாணம்,டிசெ.6

உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து பெண் ஒருவர் உட்பட இருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் சரணடைந்துள்ளனர்.

ஏழாலை வடக்கைச் சேர்ந்த 39 வயதுடைய தையல் தொழில் செய்யும் பெண் ஒருவரும் தேவாலய வீதி, சங்கானையைச் சேர்ந்த 21 வயதுடைய கூலித் தொழில் செய்யும் இளைஞர் ஒருவருமே இவ்வாறு சரணடைந்துள்ளனர்.

இவர்களைப் பாதுகாப்பாகத் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது.

இதேவேளை -

ஐயனார் கோயிலடி, கொடிகாமத்தைச் சேர்ந்த நடராசா சுரேஸ்(வயது 22) என்ற இளைஞரை கடந்த 3ஆம் திகதி முதல் காணவில்லையென அவரது உறவினர்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர். (அ*50-68)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலிகளின் குரல் மீதான தாக்குதலைக் கண்டித்த யுனெஸ்கோ நிறுவனம் மீது அரசு பாய்ச்சல்!

கொழும்பு,டிச.6

'புலிகளின் குரல்' வானொலி மீதான இலங்கை விமானப்படையின் தாக்குதலை ஐ.நாவின் உப அமைப்பான 'யுனெஸ்கோ' (ஐ.நா. கல்வி, விஞ்ஞான, கலாசார நிறுவனம்) கண்டித்தமை தொடர்பாக அந்த நிறுவனத்தின் மீது சீறிப் பாய்ந்திருக்கின்றது அரசு.

அந்த அறிக்கையை விடுத்த 'யுனெஸ்கோ' செயலாளர் நாயகம் அதனை வாபஸ் பெறவேண்டும் என அரசு கோரியிருக்கின்றது.

இது தொடர்பாக நேற்று நாடாளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம விசேட அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துப் பேசியபோது அரசின் சீற்றத்தை வெளிப்படுத்தினார். அவரது இந்தச் சீற்றமான உரைக்கு ஜே.வி.பியும் ஒத்து ஊதியது. அதனால் நேற்று நாடாளுமன்றத்தில் நீண்டநேரம் சர்ச்சையும் ஏற்பட்டது.

நேற்றுக்காலை சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார தலைமையில் நாடாளுமன்றம் கூடியபோது வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம 'யுனெஸ்கோ' செயலாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பாக விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

அவர் கூறியவை வருமாறு:-

'புலிகளின் குரல்' ஒலிபரப்பு நிலையம் சிவிலியன்களின் உடைமை அல்ல. அங்கு வேலை செய்தவர்களும் சிவிலியன்கள் அல்லர். பயங்கரவாத இயக்கத்தின் பயங்கரவாதச் செயல்களைப் பிரசாரப்படுத்தும் ஒரு பயங்கரவாத பிரசார நிலையம் இது. அத்துடன் இது இலங்கை அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று அல்ல. இது ஒரு சட்டவிரோதமான அமைப்பு. அழித்து ஒழிக்க ஏற்கனவே இலக்கு வைக்கப்பட்ட ஒன்று. நீண்ட முயற்சியின் பின் எமது வான்படையினர் சட்டவிரோதமான பயங்கரவாதிகளின் ஒலிபரப்பு நிலையத்தை அழித்துள்ளனர். இதுதான் உண்மை.

ஆனால் 'யுனெஸ்கோ' செயலாளர் நாயகம் உண்மைகளை அறிய முயற்சிக்காமல் தன்னிச்சையாக இலங்கை அரசுக்கு எதிராக விரல் நீட்டிக் கண்டித்துள்ளார். அவர் உடனடியாக இந்த அறிக்கையை வாபஸ் பெறவேண்டும் எனக் கோருகின்றோம்.

உலகின் பல நாடுகளில் தடைசெய்யப்பட்ட புலிகள் இயக்கத்தை இலங்கையில் பாதுகாக்க எந்த சர்வதேச அமைப்புக்கும் இலங்கை அரசு ஒருபோதும் இடமளிக்காது. - என்றார் வெளிவிவகார அமைச்சர். (சி)

## கைத்தொலைபேசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மக்களுக்கான அத்தியாவசிய சேவைகளை சீராக்க உதவியமைக்காக வர்த்தகர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றேன். அதேவேளை, வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கும் படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சிறு குழு ஒன்று கப்பம் கோருவதற்காக பலாலி படையினரின் பெயரைப் பயன்படுத்துகின்றது. பலாலியில் இருந்து பேசுவதாகத் தெரிவித்து அந்தக் குழு வர்த்தகர்களிடம் கப்பம் கோரிவருவதாக எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

கப்பம் கோரும் அழைப்புக்களில் பெரும்பாலானவை கைத்தொலைபேசி மூலம் விடுக்கப்பட்டதால் கடந்த மூன்று தினங்களாக கைத்தொலைபேசிச் சேவையை குடநாட்டில் நிறுத்தியுள்ளோம்.

வேறுவகையில் உங்களுக்கு அச்சுறுத்தல் எதுவும் விடுக்கப்பட்டால் ஏற்கனவே அறிவுறுத்தப்பட்ட தொலைபேசி இலக்கங்களுக்குத் தகவல் கொடுங்கள். உடன் படையினர் செயற்பட்டு சம்பந்தப்பட்டவர்களைக் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்துவர்.

**கொள்ளைகள் அதிகரிப்பு**

குடாநாட்டில் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. கொள்ளைகளில் ஈடுபடுபவர்களைக் கைதுசெய்வதற்காக படையினர் ரோந்து நடவடிக்கைகளைப் மேற்கொண்டு வருகின்றனர்.

ஓர் இடத்தில் ரோந்து புரிவதைத் படையினர் தீவிரமாக்கும்போது வேறு இடத்தில் கொள்ளையர்கள் தமது செயற்பாட்டை முன்னெடுக்கிறார்கள்.

இதைத்தடுக்க கிராமமட்டத்தில் விழிப்புக் குழுக்கள் அமைக்கவேண்டும். அந்தக் குழுக்களுக்கு படையினர் பூரண ஆதரவை வழங்குவர்.

நகைக்கடைகள், புடைவைக்கடைகளை இனந்தெரியாதவர்கள் உடைத்துக் கொள்ளையிடுகின்றனர் எனத் தகவல் கிடைத்துள்ளது: வர்த்தகர்கள் விரைந்து தகவல் தந்தால் உடன் படையினர் நடவடிக்கை எடுப்பர்- இப்படி அவர் தெரிவித்தார். (அ-1)

# மன்னார் மோதலில் 3 படையினர் பலி!

கொழும்பு,டிசெ.6

மன்னார், சின்னச் செட்டிக்குளப் பகுதியில் உள்ள சோதனைச்சாவடி ஒன்றில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது நேற்றுக்காலை 7 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் மூன்று படையினர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் என்று படைத் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தின் பின்னர் இராணுவத்தினர் அந்தப் பகுதியில் தேடுதல் மற்றும் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அத்துடன் மன்னார், நரிக்குளப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நேற்றுக்காலை 6.45 மணியளவில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் 3 விடுதலைப்புலி உறுப்பினர்கள் உயிரிழந்ததுடன் அவர்களின் பதுங்குகுழி ஒன்றும் தாக்கியழிக்கப்பட்டது என்றும் படைத்தரப்பில் கூறப்படுகின்றது.

இதேவேளை, கிளாலி முன்னரங்கப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற சமர் ஒன்றில் 3 படையினர் உயிரிழந்ததுடன் ,மேலும் பலர் காயமடைந்திருக்கின்றனர் என்று விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

தமது முன்னரங்க நிலைகளுக்குள் தாக்குதல் நடத்தும் நோக்கில் படையினர் முன்னேறி வந்தவேளை தாங்கள் அவர்களை வழிமறித்து பதில் தாக்குதல் மேற்கொண்டனர் என்றும், தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத படையினர் தமது நிலைகளுக்குப் பின்வாங்கி ஓடினர் என்றும் விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இந்த மோதல் தொடர்பாக படைத்தரப்புச் செய்தி ஏதும் வெளியிடப்படவில்லை.

## கெப்பிற்றிக்கொலாவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்லப்பட்டிருக்கின்றனர்.

காயமுற்றோரை வசதியான வைத்தியசாலைகளுக்கு இடமாற்றுவதற்காகப் பல அம்புலன்ஸ்கள் அப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் ஜூன் மாதம் கெப்பிற்றிக்கொலாவைப் பகுதியில் இடம்பெற்ற இதேபோன்ற கிளைமோர்த் தாக்குதல் ஒன்றில் 64 பயணிகள் கொல்லப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இரண்டு சம்பவங்களுக்கும் புலிகள் அமைப்பு மீது அரசு குற்றம் சுமத்தியிருக்கின்றது. (சி)

## அசாதாரண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

102 பேர் தமது அடையாளங்களை நிரூபிக்கத் தவறியுள்ளனர்.

இவர்கள் தமது அடையாளத்தை நிரூபித்தவுடன் விடுதலை செய்யப்படுவர்.

**100 பேருக்கு புலிகளுடன் தொடர்பு உண்டெனச் சந்தேகம்**

அதேவேளை, மேலதிகமாகவுள்ள நூறு பேருக்கும் புலிகளுடன் நேரடித் தொடர்புகள் இருப்பதும் தெரியவந்துள்ளது.

நூறு பேரில் 13 பேர் மலையகத்தை சேர்ந்த இளைஞர்கள். 87 பேர் வடக்கைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் மீதான விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இவர்கள் மீதான விசாரணைகளின்போது இவர்கள் நிரபராதிகள் என உறுதிப்படுத்தப்படும் போது அவர்கள் விடுதலை செய்யப்படுவர்.

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஒரு மனிதனின் உயிரை இன்னொரு மனிதன் பலவந்தமாகப் பறிப்பதற்கு இடமளிக்க முடியாது. இப்படி ஓர் அசாதாரண நிலை ஏற்படும் போது சாதாரண சட்டங்களை இடைநிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

தமிழ் மக்களைத் தனிமைப்படுத்தித் துன்புறுத்த வேண்டும் என்ற நோக்கம் அரசுக்கு இல்லை. நாட்டில் வாழும் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என அனைத்துத் தரப்பினரதும் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டியது அரசின் கடமை. இதைதான் நாங்கள் செய்கிறோம்.

- என்று குறிப்பிட்டார் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா. (அ-உ)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என். துரைரட்ண சிங்கம் வழிமொழிந்தார்.

ஸ்ரீகாந்தா தமது பிரேரணையில் தெரிவித்ததாவது-

இந்த அரசு நாட்டின் அதியுயர் அரசமைப்பை உதாசீனப்படுத்துகின்றது. தனது அதிகாரப் பலத்தைக் கையில் வைத் துக் கொண்டு தமிழ் மக்களை வகை தொகையின்றி கைதுசெய்கின்றது. அரசமைப்பின் படி எந்த ஒரு மனிதரையும் கைது செய்யும் போது அதற்கான காரணம் கூறப்பட வேண்டும். கைதுசெய்யப்பட வேண்டிய தன் தேவையையும் அவசியத்தையும் பரிசீலனை செய்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அதனை உறுதிப்படுத்திய பின்னரே கைது செய்யமுடியும்.

அவ்வாறு கைதுசெய்யப்படுபவர்கள் எங்கே தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்பதையும் எழுத்துமூலமாக கைதுசெய்யப்பட்டோரின் உறவினர்களுக்கு அறிவிக்க வேண்டும். ஆனால், அரசு இந்தக் கட்டாய நடைமுறைகளை உதாசீனப்படுத்தியுள்ளது. எவ்வளவு தொகையானவர்கள் கைது செய்யப்பட்டார்கள், பின்னர் விடுவிக்கப்பட்டார்கள் என்பது முக்கியம் அல்ல.ஆனால், அந்த அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்பதே முக்கியமானது. எனவே, சட்ட விரோதமாகக் கைதுசெய்யப்பட்டுள்ள தமிழர்கள் அனைவரையும் நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும். - என்றார். (அ-சி)

# நாடாளுமன்றில் தமிழ்ப்பெண் கைது

கொழும்பு,டிசெ.6

'செல்போன் கமரா'வைப் பயன்படுத்தி நாடாளுமன்ற வாயில்களை வீடியோப் பதிவு செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் நாடாளுமன்றத்தில் பணிபுரியும் தமிழ்ப் பெண்ணொருவர் நேற்றுக்கைதுசெய்யப்பட்டு தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டிருக்கின்றார்.

நாடாளுமன்ற தகவல் தொழில்நுட்பப் பிரிவில் கடமையாற்றும் தமிழ்ப் பெண்ணொருவரே இவ்வாறு நேற்று நண்பகல் நாடாளுமன்றப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். (சி)

# பிரதம நீதியரசருடன் இ.தொ.கா.சந்திப்பு

கொழும்பு, டிசெ.6

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான், அவரது கட்சியின் தேசிய அமைப்பாளர் இரா.யோகராஜன் ஆகியோர் நேற்று மாலை சுமார் ஒரு மணி நேரம் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா வைச் சந்தித்துப் பேசினர் என்று தெரியவந்தது.

இந்தச் சந்திப்பு கொழும்பு ஹல்ஸ்டோர்ப்பில் பிரதம நீதியரசரின் உத்தியோக பூர்வ அலுவலகத்தில் இடம்பெற்றது. (சி)

# கண்ணிவெடி அகற்றியவர்கள் மூவர் காயமுற்றனர்

கொழும்பு,டிசெ.6

மட்டக்களப்பு மாவட்டம், வவுணதீவு, மங்கிக்கட்டு, கரவெட்டிப் பகுதியில் இடம்பெற்ற வெடிவிபத்து ஒன்றில் கண்ணிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த உள்ளூர் பணியாளர்கள் மூவர் காயமடைந்தனர்.

கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருக்கும் அரச சார்பற்ற இந்திய நிறுவனம் ஒன்றில் பணியாற்றிய மூவரே நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்ற இச் சம்பவத்தில் காயமடைந்தனர். (சி)

# முருங்கனில் மோதல்

மன்னார்,டிசெ.06

மன்னார், முருங்கன் பிரதான வீதியிலுள்ள படையினரின் காவலரணை நோக்கி நேற்றுக்காலை 6.30 மணிமுதல் விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக ஆட்லறி மற்றும் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர் என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதல்களினால் நேற்றுக்காலையிலிருந்து பி.ப. 2 மணிவரை மன்னார் - மதவாச்சி வரையிலான போக்குவரத்துகள் தடைப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது

இந்தத் தாக்குதலினைத் தொடர்ந்து தள்ளாடி மற்றும் சவுத்பார் படைமுகாம்களிலிருந்து விடுதலைப் புலிகளின் நிலைகளை நோக்கிப் படையினரும் பதிலுக்குத் தாக்குதல் மேற்கொண்டனர் என்றும் கூறப்படுகின்றது.

எனினும், இந்த மோதலில் ஏற்பட்ட சேத விவரங்கள் நேற்றுமாலை வரை கிடைக்கப்பெறவில்லை.

## மரண அறிவித்தல்

### காசிநாதர் குலசிங்கம்

(செந்தா பஸ் உரிமையாளர்)

சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி வடக்கு, நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட காசிநாதர் குலசிங்கம் நேற்று (05.12.2007) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காசிநாதர் - ஆச்சிக்குட்டியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சிவபாக்கியத்தின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் நித்திலா, நிஷானி, அனுஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சபேஸ்வரன்(கொழும்பு), முகுந்தன்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் இராமராசா, இராமநாதன்(லண்டன்), நாகலிங்கம்(சுவிஸ்), செந்தில்மதி (ஆசிரியை, சிறுப்பிட்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரமேஸ்வரி, அமுதலிங்கம்(சுவிஸ்), லோகராஜா, லோகேஸ்வரி, இரத்தினேஸ்வரி(சுவிஸ்), இராஜேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சியானுஜாவின் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் கொழும்பு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று(06.12.2007) வியாழக்கிழமை பி.ப.2 மணிக்கு நடைபெற்று கல்கிசை இந்து மயானத்தில் பிற்பகல் 4 மணிக்கு பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.*
0777173860, 0112-501642

தகவல்:
புவனேஸ்வரி
(மனைவி)

யாழ். நகரின் அதிமுன்னணி ஆசிரியர்களின் வழிகாட்டலில்....
புதிய கல்வியாண்டு - 2008
• தரம் 1 முதல் O/L வரை
நாளை ஆரம்பம்
(07.12.2007 வெள்ளி 3.30 மணி)
தரம் 11(O/L) ஆசியர் குழு

| | |
|---|---|
| கணிதம் | விஞ்ஞானம் |
| K.நிறஞ்சன் | இரா.செல்வவடிவேல் |
| | M.A.நிரோஜன் |
| T.கருணாகரன் | S.கோபி |
| S.தனபால் | வரலாறு |
| தமிழ் | A.K.றொபின்சன் |
| A. நவனீதகிருஸ்ணன் | வர்த்தகம் |
| ஆங்கிலம் | E.ஜீவா |
| K.[illegible]தாசன் | சுகாதாரம் |
| | N.கங்காதரன் |
| சமயம் | புவியியல் |
| B.மயூரன் | [illegible].கோகிலன் |

*குறிப்பு- English Medium Classes
Grade 6,7,8 Only
Start on 07.12.2007 Fri 3.30 pm
நாவலி ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.

CHEMISTRY
Group Class
2008 A/L
DAS B.Sc. (Hons)
பிரிவு 1
அவத்தைச் சமநிலை
Mo., Tu. 4.00 Fri 6.15 a.m
மின் இரசாயனம்
Sat., Sun 4.30
பிரிவு 2
மின் இரசாயனம்
Sat., Sun 6.00 - 8.00 am
College of Chemistry
பழம் Rd., கந்தர்மடம்

முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை வழிகாட்டி
விற்பனையில்
விலை ரூபா 60
* யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு

ஏசியன் கல்வி நிலையம்
புத்தூர் சந்தி, மீசாலை
புதிய வகுப்புகள் ஆரம்பம்
06.12.2008 வியாழன்
- நிர்வாகி

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.12.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org